# அரிக்காரன் வலசில் ஹிந்தி எதிர்ப்புக் கூட்டம்.

## நிறைவேறிய தீர்மானங்கள்.

(ஒரு நிருபர்)

கருவூர், டிச 19.

ஷடியூரில் நேற்றுமாலை தோழர் ஈழத்துச்சிவானந்த அடிகள் தலைமையில் ஹந்திஎதிர்ப் புக்கூட்டம் நடைபெற்றது. தலைவர் முன்னுரைக்குப்பின் தோழர் பி. எஸ். இராமலிங்கம் (காங்கரஸ்) அவர்கள ஹிந்தியைக் கண்டித்துப் பேசினார். பின்னர் தோழர்கள் மருதைச் செட்டியார், சி பழனிக்குமார பிள்ளை, வை. பொன்னம்பலனார், லா கோ. சுந்தரராஜுலு நாயுடு ஆகியவர்கள் ஹிந்தி மொழியைக் கட்டாய பாடமாக்கும் மந்திரிமார் செய்கையைக் கண்டித்துப் பேசினர். பின்னர் ஹிந்தியைக் கட்டாய பாடமாக்கும் அரசியலார் செய்கையை எதிர்ப்பதாகவும் தமிழைக் கட்டாய பாடமாக்குமாறு கேட்டுக் கொள்வதாகவும் தமிழ் நாட்டைத் தனி மாகாணமாகப் பிரிக்க வேண்டுமென்றும் தமிழ் மகனாகிய கனம் டாக்டர் சுபபராயன் ஆச்சாரியார் சூழ்ச்சியில் அகப்பட்டுத் தமிழருக்குக் கேடு விளைப்பதை விட்டு தமது பதவியை ராஜினாமா செய்வதே ட்ரதிசாவித்தனமென்று இக்கூட்டம எச்சரிக்கிறதென்றும் தமிழ் மக்கள் முன்னேற்றத்திற்குப பாடுபடும "விடுதலை" "குடி அரசு" "நகர தூதன்" முதலிய பத்திரிகைகளை ஒவ்வொரு தமிழ் மகனும் ஆதரிக்க வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேறின.